# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



**சேலம் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் (பொறுப்பு)**
**அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு. க. இளங்கோ, பி.இ.,**
**திட்ட அனுமதி**
**நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு-49-ன் கீழ்**

**ந.க.எண். 771/2017/சேஉ_திகு** நாள்: 06.10.2017
**தி.அ. எண்.20/ 2017**
**உள்ளாட்சியின் பெயர்: சேலம் மாநகராட்சி**

**பொருள் :** கட்டிடம் – சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் – சேலம் மாநகராட்சி, அழகாபுரம்புதூர் கிராமம்– ச.எண். 121/1ஏ1பாகம், புதிய வார்டு– E, பிளாக்–11, நகரளவு எண். 9/33–ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/சேஉதிகு எண்.93/2008–ல் மனை எண்.11, 12, 13 ஆகிய மனைகள் ஒருங்கிணைப்பு செய்து 662.07சமீ பரப்பு கொண்ட மனையிடத்தில் ஸ்டில்ட் (வாகன நிறுத்துமிடம்) + முதல் தளம் (1x1) + 3 தளங்களில் (3x4) மொத்தம் 13 குடியிருப்பு கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானத்திற்கு திட்ட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**
1. மனுதாரர் திரு. எம். கிருஷ்ண கீர்த்தி, மௌலிவாக்கம், சென்னை அவர்களின் விண்ணப்பம் நாள். 01.06.2017, 27.07.2017 மற்றும் 05.10.2017.
2. உதவி ஆணையாளர், சேலம் மாநகராட்சி, அவர்களின் கடிதம் ந.க.எண். ஜே11/6096/17, நாள்.14.09.2017.
3. அரசாணை எண்.17, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(3)) துறை நாள்.05.02.2016.
4. சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.1012, நாள்.25.01.2011.

.........

**உத்திரவு**

சேலம் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி, சேலம் மாநகராட்சி, அழகாபுரம்புதூர் கிராமம்– ச.எண். 121/1ஏ1பாகம், புதிய வார்டு– E, பிளாக்–11, நகரளவு எண். 9/33–ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/சேஉதிகு எண்.93/2008–ல் மனை எண்.11, 12, 13 ஆகிய மனைகள் ஒருங்கிணைப்பு செய்து 662.07சமீ பரப்பு கொண்ட மனையிடத்தில் ஸ்டில்ட் (வாகன நிறுத்துமிடம்) + முதல் தளம்(1x1) + 3 தளங்களில் (3x4) மொத்தம் 13 குடியிருப்பு கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட மனைக்கு **'ABCDE'** என எல்லையிட்டு ம.வ/சேஉ_திகு.எண்.20/2016 என்ற எண்ணிடப்பட்டு மனை ஒருங்கிணைப்பு அனுமதியும் அம்மனையில்,

உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிட பரப்பு விபரம் :

மனையிடத்தின் மொத்தப் பரப்பு – 662.07 சமீ

உத்தேசக் கட்டுமானப் பரப்பு

| | | | |
|---|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | : | 307.01 சமீ | (வாகன நிறுத்துமிடம்) |
| முதல்தளம் | : | 307.01 சமீ | 1 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | : | 320.77 சமீ | 4 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | : | 320.77 சமீ | 4 குடியிருப்புகள் |
| நான்காம் தளம் | : | 320.77 சமீ | 4 குடியிருப்புகள் |
| ஹெட்ரூம் | : | 23.16 சமீ | (மாடிப்படி கூண்டு) |
| மொத்தம் | : | 1599.49 சமீ | 13 குடியிருப்புகள் |

மேற்கண்ட பரப்பளவு கொண்ட உத்தேச கட்டுமானத்திற்கு க. வ. தி. அ / தே உ தி கு. எண். 20/2017 என்ற எண்ணில் **06.10.2017** முதல் 5 (ஐந்து) வருட காலத்திற்கு கீழ்காணும் சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49(2)-ன்படி திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:-**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning Permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the Architect/Licensed Surveyor and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.
3. " நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த அவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப் பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."
4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்தம் ஆகிய விபரங்கள் கொண்ட பலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
5. "The Provisions in the G.O.(MS).No.17, H&UD(UD4(3)), Department, dated: 05.02.2016, shown in Reference -2 relating to installation and use of solar energy system, should be followed".
6. The Tamil Nadu Government in G.O: Ms. No. 112, Housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority."

# பொது நிபந்தனைகள்.

1 திட்டஅனுமதியானது பிரிவு 49 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35 1972)-ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.

2 பிரிவு 79, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (சட்டம் 35-1972)ன்படி எந்த நபராவது பிரிவு 49 அல்லது 64(1)ன்கீழ் இந்த உத்தரவு அல்லது தீர்மானத்தினால் பாதிக்கப்பட்டிருப்பின் உத்தரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

3 சேலம் உள்ளூர்திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு (i) திட்ட அனுமதி பெற தவறான விவரம் மனுதாரரால் சமர்பிக்கப்பட்டிருந்தாலோ.,
(ii) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ உறுப்பினர் செயலர், மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4 (i) அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி மழைநீர் சேகரிப்பு குழிகள் வரைபடத்தில் காட்டியுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும்.
(ii) குளியல் அறை மற்றும் Wash Basin கழிவுநீர் சுத்திகரித்து கழிப்பறைகளுக்கு பயன்படுத்தும் வகையில் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்.

5 சூரிய வெப்ப கட்டமைப்பு (Solar Water Heating System) அமைக்கப்பட வேண்டும்.

6 மனையில் கட்டிடம் கட்டும்போது Fly Ash Bricks & Materials கண்டிப்பாக பயன்படுத்தப்பட வேண்டும்.

7 வரைபடத்தில் காட்டியுள்ளவாறு பக்கத்திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

8 அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 3.11.2004-ன்படி கட்டிடத்தில் U Trap in the septic tank design அமைக்கப்பட வேண்டும்.

9 பொருந்தும் இனங்களுக்கு உத்தேசம் குறித்து கழிவு நீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய சட்டம் பிரிவு 25 (Water Act) -ன்படி வாரிய இணக்கம் (Consent) பெறப்படவேண்டும்.

10 கட்டிடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

11 மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவைகளுக்கு கொசுத் தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.

12 உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் நிறுவனம் மற்றும் பொறுப்பாளர் குடியிருப்புகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதிகள் ஆகியவற்றை மனுதாரர் தம்சொந்த செலவில் செய்துதர வேண்டும்.

13 உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவிற்கு தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும்

14 திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் Lamination செய்து காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

15 வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.

16 கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஓயரிங் செய்யப்பட வேண்டும்.

17 கட்டிடத்தில் நில அதிர்வை தாங்கும் முறைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

18 வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டு, அக்கட்டிடத்திற்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (சேலம் மாநகராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மனுதாரரால் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது. திட்ட அனுமதி வரைபடங்களுடன் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின்கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும்.

6/10/2017

உறுப்பினர் செயலர் (பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்.

06/10/17

இணைப்பு
முத்திரையிட்ட வரைபடம் – 2

பெறுநர்
ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம்.

<u>நகல் :</u> (முத்திரையிட்ட வரைபடத்துடன்)
Mr. M. Krishnakiriti,
D. No. AS. 1, Dwaraka, No.5,
Ashram Avenue, Mugalivakkam,
Chennai - 600 125

**சேலம் மாநகராட்சி**

**உதவி ஆணையாளர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், சேலம் மாநகராட்சி அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு. நா.சத்தியநாராயணன் அவர்கள்,**

## கட்டிட அனுமதி உத்திரவு

**(சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272, 273, 279–ன்கீழ் பிறப்பிக்கப்பட்டது)**

தி.அ.எண்: ஜெ11 / 546/ 2017

நாள்: 06.11. 2017

க.வி.எண்: ஜெ11 / 262/2017

**பொருள்:** கட்டிட அனுமதி – சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், டவுன் சர்வே எண். T.S. No.9/33 ,Ward –E, Block-11 **படையப்பா கார்டன், அழகாபுரம் புதூர் கிராமம்,** வீதியில் புதியதாக கட்டிடம் கட்ட சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272 (1), 273, 279–ன்படி மனை மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் – உத்திரவு பிறப்பித்தல்.

**பார்வை:**

1. M. கிருஷ்ணகீர்த்தி த/பெ. புருஷோத்தம்ராவ், என்பவரின் விண்ணப்பம் நாள்:03.11..2017.
2. இரசீது எண்கள்

| | | | |
|---|---|---|---|
| **பாதாள சாக்கடை திட்ட வைப்பு தொகை** | – | – | – |
| **கட்டிட அனுமதி கட்டணம்** | 0000274 | ரூ.6600/– | 03.11.2017 |

3. இவ்வலுவலக திட்ட அனுமதி ஜெ.11 / 546/ 2017, நாள் : 06.11.2017 .

*******

**உத்தரவு :–**

சேலம் மாநகராட்சி T.S. No.9/33 ,Ward –E, Block-11 **படையப்பா கார்டன், அழகாபுரம் புதூர் கிராமம் ,** தெருவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் படி அடுக்கு மாடி குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கான புதியதாக கட்டிடம் கட்ட கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி **06.11.2017 முதல் 05.11..2019 முடிய இரண்டு** வருட காலத்திற்கு **H. ரமேஷ்** , என்பவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1) கட்டிடம் கட்டப்படும் இடத்தில் முன்புறமாக கட்டிட உரிமையாளர் பெயர், கட்டிட அனுமதி எண். அனுமதி பெற்ற தேதி அனுமதி காலம், அனுமதி நீடிப்பு காலம், கட்டிடம், கட்டப்படும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் வைக்கப்பட்ட 2:1 அளவு கொண்ட கரும்பலகையை நன்கு தெரியும் வண்ணம் மாட்டி ்வைக்கப்படவேண்டும்

2) அங்கீகரிக்கப்பட்ட திருத்திய வரைபடம் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வுக்கு காண்பிக்கும் வண்ணம் கட்டிட இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

3) கட்டிடத்தை அங்கீகரிக்க வரைபடங்களின்படி பூர்த்தி செய்த15 தினங்களுக்குள் அல்லது பணி முடிவுற்ற 15 தினங்களுக்குள் சேலம் மாநகராட்சி 1994ம் வருடத்திய சட்டம் 129 ன் படி மாநகராட்சி ஆணையருக்கு சொத்து வரி விதிக்க கோரி உரிய படிவத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிட பாகங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 283–ன் படி அரையாண்டு ஒன்றுக்கு 9 சதுர மீட்டருக்கு ரூ.50/– அபராதம் வசூலிக்கப்படும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதலாகவும் விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட மாட்டாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதை செய்ய தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டம் 447–ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது தொகையையும் உம்மிடம் வசூல் செய்யப்படும்.

7) வழங்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டபடி கட்டிட வேலை ஆறு மாத காலத்திற்குள் துவங்கப்படவேண்டும் அவ்வாறு துவங்கப்படாவிட்டால் மீண்டும் கட்டிட அனுமதியை உரிய தொகையை செலுத்தி புதுப்பித்துக்கொண்ட பின்னரே கட்டிட வேலை துவங்கப்படவேண்டும்.

8) ஏற்கனே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும்.

9) பொது சுகாதார சட்டம் பிரிவு 26,33–ன் படி மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து உத்திரவு பெறப்படாமல் புதியதாக கட்டப்பட்ட வீட்டில் குடிபுகக் கூடாது.

10) கட்டிட சம்பந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை சாலைகளில் போடக் கூடாது.

11) முனை இடத்தில் மீதமுள்ள காலியிடத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புபடி மழைநீர் சேகரிப்பு மனையில் செய்து முடிக்க வேண்டும்.

13) தவறான அல்லது மோசடியான ஆவணங்கள், தகவல்கள் (Misrepresentation or fraud) சமர்பித்து கட்டிட உரிமம் பெற்றுள்ளது தெரியவந்தால் சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 451 (4)–ன் படி உரிமம் ரத்து செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை தொடரப்படும்.

14) கட்டிடத்தின் கூரையிலிருந்து மனையின் திறந்த வெளியிலிருந்தும் வரும் மழைநீரை சேமிக்கும் வகையில் தங்கள் மனைக்குள் மழைநீர் உறிஞ்சி குழிகள் அரசு பிரசுரங்களில் அறிவுறுத்தியுள்ள அளவுகளின் படி அமைக்க வேண்டும்.

15) புதிய கட்டிட விதிகளின்படி மருத்துவமனைகள், சமுதாய கூடங்கள், திருமண மண்டபங்கள் அனைத்து தங்கள் மனைகள் மற்றும் 150 ச.மீ பரப்புக்கு கூடுதலாக குடியிருப்புக்குக் கட்டிடங்களுக்கு சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவவேண்டும்.

இணைப்பு:– ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் –1

உண்மை நகல் –2

ஆணையருக்காக,
சேலம் மாநகராட்சி.

**பெறுதல் :**
M. கிருஷ்ணகீர்த்தி த/பெ. புருஷோத்தம்ராவ்,
பிளாட் எண்.11,12,13 . படையப்பா கார்டன், அழகாபுரம் புதூர்,சேலம்.

**நகல் :** இ.நி.பொ/உ.பொ. கட்டிடம் கட்டுவதை கண்காணித்து மேல் நடவடிக்கை எடுக்க

**நகல் :** உதவி ஆணையாளர் (வருவாய்)

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate